செ.வெ.எண்:-36/2020 நாள்:14.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

# திண்டுக்கல் மாவட்டத்தில் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை இடர்பாடுயின்றி வழங்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது - மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் தகவல்.

---

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் திண்டுக்கலில் கண்காணிப்பு உள்ளாக்கப்பட்ட நுழைவு வாயில் பகுதிகளில் ஆய்வு செய்து அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை இடர்பாடு இன்றி வழங்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். ஆய்வின் போது மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டம் முழுவதும், கொரோனா வைரஸ் நோய் தாடுப்பு நடவடிக்கை போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல், நத்தம், நிலக்கோட்டை, பழனி ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட 56 நபர்களுக்கு சிறப்பான சிகிச்சை கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தொற்று கண்டறியப்பட்டவர்களின் உறவினர்கள், அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு சுகாதாரத்துறை அலுவலர்கள் மூலமாக தொடர்ந்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பரிசோதனையில் தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டவர்களும் குறிப்பிட்ட நாட்கள் வரை தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்றின் இரண்டாம் கட்டத்தில் உள்ளோம் மூன்றாம் கட்டமான சமூக பரவல் ஏற்படாத வகையில் தீவிர நடவடிக்கையினை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸ் சமூக பரவலை தடுக்கும் பொருட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் கண்காணிப்புக்கு உள்ளான பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பில் அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொற்று கண்டறியப்பட்ட பகுதிகளும் முழு கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கண்காணிப்புக்குள்ளான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதி பொதுமக்களின் கூடுதல் தேவைகளை கண்டறிந்து, அதனை எவ்வாறு சிறப்பான முறையில் நிறைவேற்றுவது என்பது குறித்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது,

அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அவர்களின் அன்றாட தேவைகளான குடிநீர் வாகனம், எரிவாயு சிலிண்டர் வாகனம், ஆம்புலன்ஸ் மற்றும் காய்கறி, மளிகை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென கோரிக்கை அளித்தனர். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் மூலமாக கண்காணிப்பு பகுதிகளில் கூடுதலாக காய்கறி வாகனங்களை அனுப்புவதற்கும், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மூலமாக அப்பகுதிகளில் உள்ள சிறு மளிகை கடைகளை அரசு அறிவித்துள்ள நேரங்களில் திறப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கண்காணிக்கப்பட்டு வரும் பகுதிகளில் பொதுமக்களின் சுகாதார நலத்தினை கருத்தில் கொண்டு, வாரம் இரு முறை நடமாடும் மருத்துவ முகாம் நடத்திடவும், எந்தெந்த நாட்களில், எந்தெந்த பகுதிகளில் முகாம் நடைபெறவுள்ளது என்ற விவரத்தினையும், முன்னதாகவே பொதுமக்களுக்குத் தெரியப்படுத்திட மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கண்காணிப்பு பகுதியில் பரிசோதனைக்கான செல்லும் சுகாதாரத்துறையினர் அப்பகுதிகளில் உள்ள முதியவர்கள் உள்ளிட்டவர்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகளை அவர்கள் இருப்பிடங்களிலேயே வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதிகளில் உள்ள சுகாதார நிலையங்களில் தேவையான மருந்து, மாத்திரைகளை இருப்பில் வைத்திடவும், அப்பகுதி மக்களில் நீரிழிவு நோய் மற்றும் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு பரிசோதனை செய்து இரண்டு மாதங்களுக்குத் தேவையான மருந்து மாத்திரைகளை முன்னதாகவே வழங்கிடவும் மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள 647 படுக்கைகளில், தனிமைபடுத்தப்பட்டவர்களுக்கு 260 படுக்கைகள், பழனி அரசு மருத்துவமனையில் 207 படுக்கைகளும், கொடைக்கானல் மருத்துவமனையில் 30 படுக்கைகளும், தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்ட 4 தனியார் மருத்துவமனையில் 160 படுக்கைவசதிகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், தேவயையான அளவு வென்டிலேட்டர்களும் தயார்நிலையில் உள்ளன.

பொதுமக்களின் நலன், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கருதியே தமிழக அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தங்குதடையின்றி, தொய்வின்றி சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது. இத்தகைய நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும் என மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, திண்டுக்கல் சரக காவல்துறை துணைத்தலைவர் திரு.ஜோஷி நிர்மல்குமார், இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆர்.சக்திவேல், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.வி.மருதராஜ், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வி.பி.பி.பரமசிவம் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---